# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 98/மா/2024**

**நாள் 05.11.2024**

திரு.M.கணேசன், இருக்கன்குடி. ---- முறையீட்டு மனுதாரர்

ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி. ---- எதிர் மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி, மேற்கு தெரு, அன்னை இல்லம், கதவு எண். 1/63A, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.கணேசன் என்பவரின் 08.01.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.01.2024 அன்று பெறப்பட்டு, 98/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி, மேற்கு தெரு, அன்னை இல்லம், கதவு எண். 1/63A, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.கணேசன் என்பவர் தனது 08.01.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"தூத்துக்குடி மாநகராட்சி, வடக்கு மண்டலம் (வார்டு 6) மேட்டுப்பட்டிக்கும் உப்பளங்களுக்கும் நடுவில் செல்லும் சாலை சரிவர அமைக்கப்படவில்லை என்றும், மேட்டுப்பட்டி சாலையின் ஓரத்தில் இருக்கும் சில மாநகராட்சியின் மின் கம்ப விளக்குகள் வீட்டின் காம்பவுண்ட் சுவர் உள்பகுதியில் சுமார் 6 அடி தூரத்தில் வீட்டிற்க்குள் உள்ளது என்றும், அரசு சுற்றறிக்கைப்படி மாநகராட்சி பகுதிகளில் சாலையின் மேற்தள கட்டுமானத்தை மட்டும் தேவைப்படும் கனத்திற்கு சுரண்டி எடுத்துவிட்டு (Milling) அதே அளவுக்கு மேற்தளம் Thickness of BC 4 Centimeters (40 mm) இட வேண்டும். ஆனால் புதிதாக சாலை அமைத்த ஒப்பந்ததாரர்கள் மேற்படி சுற்றறிக்கைக்கு விரோதமாக தற்போது ஒரு அடர்தளம் (Wet Mix Macadam (WMM) / சுமார் 6 இன்ச் முதல் 9 இன்ச் கனம் / உயரத்திற்கு அமைத்துள்ளனர். அதற்கு மேல் (Bituminuous Concrete (BC) ) தார் மிக்ஸ்ட் லேயர் போட்டு சாலை மட்டத்தை உயர்த்தி உள்ளார்கள். தற்போது சாலை அமைந்த இடம் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்கள் சங்க அரசு ஒப்படை நிலத்திற்கு சொந்தமான ரோடு ஆகும். ஆக மொத்தத்தில் மக்கள் வரி பணம் வீணடிக்கப்பட்டுள்ளதுடன் இந்த முறை புது ரோடு போட்டதால் சுமார் 6 இன்ச் முதல் 9 இன்ச் வரை சாலையின் மட்டம் அதிகரிக்கப்பட்டு சில பகுதியில் சுமார் 9 அடிக்கு மேல் உப்பள பகுதிக்குள் சாலை ஆக்கிரமித்து போடப்பட்டு வருகிறது.

மாநகராட்சிக்கு உரிமையில்லாத இடத்தில் அரசு சுற்றறிக்கைக்கு விரோதமான சாலைகளை உடன் அகற்றி மேற்படி பகுதிக்கு ஏற்ப உகந்த சாலை அமைத்திடவும் அரசு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.என்.2) துறை கடித எண்.5916/எச்.என்.2/2021–1 நாள் 12.05.2021–ற்கு விரோதமாக சாலை ஒப்பந்ததாரர்கள் செயல்படுவதாகவும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்காத அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 19.01.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தனது 01.03.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“வடக்கு மண்டல எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6 திரேஸ்புரம் அருகில் உள்ள மேட்டுப்பட்டி மயானம் வரை செல்லும் சாலை ஏற்கனவே அமைக்கப்பட்ட சாலையாகும். மேற்படி சாலை குடிநீர் பணிக்காக தோண்டப்பட்டதாலும், சாலை அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிய நிலையில், மிகவும் பழுதடைந்த நிலையில் சாலை போக்குவரத்திற்கு மிகவும் இடையூராக இருந்தது. எனவே மேற்படி சாலையானது, தற்பொழுது ஏற்கனவே இருந்த சாலையின் அகலத்திலேயே, மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே இருந்த சாலையின் அகலத்தில் (Riding surface of the road) எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை. மேலும் மேற்படி மனுவில், மனுதாரர் ஆக்கிரமிப்பு அகற்றிட கோரிய இடம், தூத்துக்குடி 1 கிராமம் புலப்படத்தில் மன்னார் வளைகுடா நில அளவை செய்யப்படாத பகுதி (Unsurveyed Land) ஆகும். எனவே மேற்படி பகுதியில் உள்ள சாலை ஆக்கிரமிப்புகளை மாநகராட்சியால் அப்புறப்படுத்த இயலாது என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே மேற்படி பகுதியில் மாநகராட்சி விதிகளின்படி சாலை அமைக்கப்பட்டுள்ளது. ’’ என தெரிவித்துள்ளார்.

4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.09.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.08.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் 03.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை. ஆனால் தூத்துக்குடி மாநகராட்சி உதவிப்பொறியாளர் 03.09.2024 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“தூத்துக்குடி மாநகராட்சி, மாநகர் பிரிவு எண்.7 திரேசபுரம் மேட்டுப்பட்டி சாலை (திரேசபுரம் சால்ட் பேன் ரோடு) மன்னார் வளைகுடா கடற்கரை பகுதியில், ஏற்கனவே அமைக்கப்பட்டு தற்போது குடிநீர் பணிகளுக்காக தோண்டப்பட்டதனால், சாலை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. மேற்படி சாலையின் வழியாகத்தான் அப்பகுதியில் அமைந்துள்ள பொது மயானத்திற்குள் செல்ல முடியும். எனவே அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க சாலை அமைக்கப்பட்டது. இச்சாலை குடிநீர் பணிக்காக தோண்டப்பட்டதால் அதன் கீழ்பகுதி கடினத் தன்மை இழந்து காணப்பட்டது. எனவே Base Course தளமாக wet mix macadam 10 செ.மீ அளவில் அமைக்கப்பட்டு MORTH SPECIFICATIONபடி 5 செ.மீ கணம் அளவில் Dense Bituminous Mecadam அமைத்து, அதன் மேல் 3 செ.மீ அளவில் Bituminous Concrete தளம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை ஏற்கனவே இருந்த சாலையின் அகலத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது. சாலையில் எவ்வித EB Poleகளோ ஆக்கிரமிப்போ இல்லை, மேலும் மேற்படி பகுதி மன்னார் வளைகுடா கடற்கரை பகுதி, Unsurveyed Land ஆக உள்ளதால் மாநகராட்சி சார்பாக சாலை அருகில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வழிவகை ஏற்படவில்லை. தற்போது இச்சாலை

அமைக்கப்பட்டபின் கடந்த 2023 டிசம்பர் மாதம் பெய்த வடகிழக்கு பருவமழை பெரும் வெள்ளத்தின் போது இச்சாலை எவ்வித சேதமும் அடையாமலும் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்ற விவரத்தை இம்முறைமன்ற நடுவத்தில் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

6) மனுதாரர் திரு.M.கணேசன் 03.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகாததால் அன்னாரை 03.10.2024 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகும்படி இம்முறைமன்றத்தால் மீண்டும் ஒரு வாய்ப்பு அவருக்கு வழங்கப்பட்டது. மனுதாரர் திரு.M.கணேசனின் பிரதிநிதி கே.பாலசுப்பிரமணியன் 03.10.2024 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

- தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் (வார்டு 6) மேட்டுப்பட்டி உப்பளங்களுக்கு நடுவில் செல்லும் சாலை அரசு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.என்.2) துறை கடித எண்.5916/எச்.என்.2/2021–1 நாள் 12.05.2021 க்கு விரோதமாக சரிவர அமைக்காமல் சுமார் 6இன்ச் முதல் 9 இன்ச் உயரத்திற்கு அமைத்துள்ளனர்.

- மேட்டுப்பட்டு சாலையின் ஆக்கிரமிப்பை அகற்றாமல், மாநகராட்சியின் மின் கம்ப விளக்குகள் வீட்டின் காம்பவுண்ட் சுவர் உள்பகுதியில் சுமார் 6 அடி தூரத்தில் வீட்டிற்க்குள் அமைக்கப்பட்டுள்ளது.

- மேற்படி மாநகராட்சிக்கு உரிமையில்லாத அரசு, உப்பு சங்கத்திடம் ஒப்படை நிலம் இடத்தில் அரசு சுற்றறிக்கைக்கு விரோதமான சாலைகளை உடன் அகற்றி மேற்படி பகுதிக்கு ஏற்ப உகந்த சாலை அமைத்திட வேண்டும்

- அரசு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.என்.2) துறை கடித எண்.5916/எச்.என்.2/2021–1 நாள் 12.05.2021 க்கு விரோதமாக சாலை ஒப்பந்ததாரர்கள் செயல்படுவதால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்காத அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

- மேற்கண்ட புகார் தொடர்பான எனது எழுத்து பூர்வமான வாதுரை மற்றும் புகைப்பட நகல்களை இத்துடன் இணைத்துள்ளேன் என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மாநகராட்சி அலுவலரின் வாக்குமூலம், புகைப்படங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

வடக்கு மண்டலம் (வார்டு 6) மேட்டுப்பட்டிக்கும் உப்பளங்களுக்கும் நடுவில் செல்லும் சாலை சரிவர அமைக்கப்படவில்லை என்றும் மேலும் மேட்டுப்பட்டி சாலையின் ஓரத்தில் இருக்கும் சில மாநகராட்சியின் மின்கம்ப விளக்குகள் வீட்டின் காம்பவுண்ட் சுவர் உள்பகுதியில் உள்ளது. மாநகராட்சிக்கு உரிமையில்லாத இடத்தில் அரசு சுற்றறிக்கைக்கு விரோதமாக உள்ள சாலைகளை அகற்றி மேற்படி பகுதிக்கு உகந்த சாலை அமைக்கவும் நடவடிக்கை எடுக்காத அரசு அலுவலர்கள் மீது நடவடிக்கையும் எடுக்க மனுதாரர் கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதியில் ஏற்கனவே உள்ள சாலை தற்போது குடிநீர் பணிகளுக்கு தோண்டப்பட்டுள்ளது. பொது மயானத்திற்கு அந்த வழியாக செல்ல வேண்டும் . எனவே பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அங்கு சாலை அமைக்கப்பட்டுள்ளது. சாலை குடிநீர் பணிக்காக தோண்டப்பட்டதால் அதன் கீழ்பகுதி கடினத்தன்மை இழந்து காணப்பட்டது. அதனால் ஏற்கனவே இருந்த சாலையின் அகலத்திலேயே முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது என்றும் அங்கு EB POLES மற்றும் ஆக்கிரமிப்புகள் இல்லை என்றும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மன்னார் வளைகுடா கடற்கரை பகுதி unsurveyed Land ஆக உள்ளதால் மாநகராட்சி சார்பாக சாலை அருகில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வழிவகை ஏற்படவில்லை என்றும் கடந்த 2023

டிசம்பர் மாதம் பெய்த வடகிழக்கு பருவமழை பெரும் வெள்ளத்தின் போது இச்சாலை எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதும் தூத்துக்குடி மாநகராட்சி உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

மாநகராட்சி ஆணையரின் அறிக்கையில் சாலைகள், முறைப்படியாக விதிகளுக்கு உட்பட்டு போடப்பட்டு இருப்பதாக தெரிவித்து இருந்தாலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகார்கள் தொடர்பாக இணை இயக்குநர் மற்றும் பொறியாளர் அடங்கிய குழு ஒன்றினைஅமைத்து புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளை அக்குழு மீண்டும் கள ஆய்வு செய்து அறிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்குமாறும், மேற்காணும் சாலைகளில் ஏதாவது குறையிருப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டால் அந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்துமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்,

1) திரு. M.கணேசன்,
வழக்கறிஞர்,
1/63A, அன்னை இல்லம்,
மேற்கு தெரு, இருக்கன் குடி–626 202,
விருதுநகர் மாவட்டம்.
2) ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.
4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர், சென்னை 32
இகோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).